செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்
(தன்னாட்சி நிறுவனம், கல்வி அமைச்சகம், இந்திய அரசு)
செம்மொழிச் சாலை, பெரும்பாக்கம், சென்னை – 600100
CENTRAL INSTITUTE OF CLASSICAL TAMIL
(An Autonomous Institution under the Ministry of Education, Government of India)
Chemmozhi Salai, Perumbakkam, Chennai – 600100

நாள்: 26.09.2024

# தென்னிந்திய மொழிகளுக்கிடையேயான இலக்கண உறவுகள்

## பயிலரங்கம் - 12

## The Grammatical Relationships between South Indian Languages

## (16.10.2024 - 22.10.2024)

## அறிவிப்பும் அழைப்பும்

பார் புகழும் பாரத நாடு பல மொழிகளின் உறைவிடமாக விளங்குகிறது. இப்பாரத நாட்டின் தென்னகத்தே சிறப்புற்று விளங்கும் மொழிகளுள் தமிழ் மொழி தொன்மையானதாகவும் உயர்தனிச் செம்மொழியாகவும் திகழ்கிறது. எண்ணிலடங்கா இலக்கியங்கள் இம்மொழியில் உள்ளன. அதே போன்று இவ்விலக்கியங்களுக்கு வரையறைகளை வகுத்துக்கூறும் இலக்கண நூல்களும் இம்மொழியில் பல உண்டு. இத்தகைய தமிழ் மொழியின் இலக்கண நூல்களின் கருத்துகளோடு நெருங்கிய உறவுகள் கொண்ட மொழிகளான தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகியவற்றின் இலக்கண நூல்களின் கருத்துகளையும் ஒப்பிட்டு ஆராய்தலே இப்பயிலரங்கின் நோக்கமாகும்.

எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்னும் ஐந்திலக்கண மரபினையுடையது தமிழ் மொழி. இம்மொழியில் ஐந்திலக்கணத்தையும் கூறும் நூல்களும் எழுத்து, சொல்லை மட்டும் கூறும் நூல்களும் பொருளிலக்கணத்தை மட்டும் கூறும் நூல்களும் யாப்பினை மட்டும் விளக்கும் நூல்களும் அணியிலக்கணத்தை மட்டும் விதந்தோதும் நூல்களும் உண்டு. இதன் அடிப்படையில் தொல்காப்பியம், இறையனார் களவியல், அகப்பொருள் விளக்கம், புறப்பொருள் வெண்பாமாலை, யாப்பருங்கலம், யாப்பருங்கலக்காரிகை, தண்டியலங்காரம், நன்னூல், வீரசோழியம், முதலானவை தமிழ் இலக்கண மரபில் சிறப்பான இடம்பெற்று விளங்குகின்றன. இதன் பட்டியல் இன்னும் நீளும்.

இதே போன்று கன்னட மொழியில் கவிராசமார்க்கம், சப்தமணிதர்ப்பணம், தெலுங்கு மொழியில் ஆந்திரசப்த சிந்தாமணி, ஆந்திர பாஷாபூஷணம், மலையாள மொழியில் லீலாதிலகம் ஆகிய மரபிலக்கண நூல்கள் அமைந்துள்ளன.

மேற்கண்ட மரபிலக்கண நூல்களை அடிப்படையாகக் கொண்டு வரலாற்று முறை இலக்கண ஆய்வு, இலக்கண ஒப்பாய்வு, இலக்கணவியல் கோட்பாட்டு ஆய்வு, இலக்கணம் கற்பிக்கும் முறையியல் போன்ற பல்வேறு பொருண்மைகளின் அடிப்படையில் இப்பயிலரங்கம் நடைபெற உள்ளது.

இப்பயிலரங்கில் மொழியியல் அறிவும் மரபிலக்கணத் தெளிவும் பன்மொழிப் புலமையும் ஒருங்கே பெற்ற அறிஞர் பெருமக்கள் பயிற்றுவிக்க உள்ளனர். தமிழியல், மொழியியல், வரலாறு ஆகிய துறைகளில் முனைவர் பட்ட ஆய்வு மேற்கொள்ளும் மாணவர்களை இப்பயிலரங்கில் பங்கேற்றுப் பயனடையுமாறு செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் அன்புடன் அழைக்கிறது.

**பயிலரங்க விதிமுறைகளும் விவரங்களும் கீழ்வருமாறு:**

- பயிலரங்கில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை - **30**
- பயிலரங்கு நடைபெறும் நாட்கள்:**16.10.2024** முதல் **22.10.2024** முடிய ஏழு நாட்கள்.
- பயிலரங்கு நேரம்: காலை **10.00 - 1.00** & மாலை **2.00 - 5.00**.
- பங்கேற்பாளர்கள் தங்குமிடத்தைத் தாங்களே ஏற்பாடு செய்துகொள்ள வேண்டும்.
- பங்கேற்பாளர்களுக்குப் பயணப்படியும் நாட்படியும் செம்மொழி நிறுவன விதிமுறைகளின்படி வழங்கப்படும்.
- பங்கேற்பாளர்களுக்கு மதிய உணவும் தேநீரும் நிறுவனத்தின் சார்பில் வழங்கப்படும்.
- பயிலரங்கில் கலந்துகொள்ள விரும்புவோர் இணையவழியில் மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும்.
- இணையவழி விண்ணப்பத்தை **https://forms.gle/ZTjk4raJVJgR2yN98** என்ற இணைப்பின் வழியாகவோ அல்லது கீழ்வரும் விரைவுத் தகவல் குறியீடு (QR-code) மூலமாகவோ பெற்றுக்கொள்ளலாம்.

- நிறைவு செய்யப்பட்ட விண்ணப்பங்கள் வந்துசேர வேண்டிய இறுதி நாள் **09.10.2024.** காலதாமதமாக வரும் விண்ணப்பங்கள் எக்காரணத்தைக் கொண்டும் ஏற்கப்படமாட்டா.
- செம்மொழி நிறுவன விதிமுறைகளின்படி தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு **09.10.2024.** அன்று மின்னஞ்சல்/புலனம் வழியாக மட்டும் அழைப்பாணை அனுப்பி வைக்கப்படும்.
- இப்பயிலரங்கில் பங்கேற்போர் **28** அமர்வுகளிலும் தொடர்ந்து கலந்துகொள்ள வேண்டும். அமர்வுக்குத் தாமதமாக வருதலைத் தவிர்த்தல் வேண்டும். தாமதம் மற்றும் இடைநிற்றல் இருப்பின் நாட்படியும் சான்றிதழும் வழங்கப்படமாட்டா.
- பங்கேற்பாளர்கள் செம்மொழி நிறுவன விதிமுறைகளைப் பின்பற்றிட வேண்டும்.

**இயக்குநர்**